பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 16 வியாழக்கிழமை 02.10.2025 கதிர் 326

## நாடாளுமன்றில் அறுதிப் பெரும்பான்மை இருந்தும் மக்கள் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை இல்லை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆளும்தரப்பிற்கு 159 ஆசனங்கள் கொண்ட நாடாளுமன்றப் பெரும்பான்மை இருந்தும் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. இதன் காரணமாக, மக்கள் இப்போது அதிகாரமற்ற எதிர்க்கட்சியை நோக்கித் திரும்பியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டம், கலாவெள தேர்தல் தொகுதி, கட்டியாவ பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி நடமாடும் சேவை மற்றும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வில் உரையாற்றும் எதிர்க்கட்சி தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

76 வருட வரலாற்றில் முதல் முறையாக, ஆளும்தரப்பிற்கு இலட்சக்கணக்கான வாக்குகளை வழங்கி, நாடாளுமன்றத்தில் 159 ஆசனங்களைப் பெற்றுத் தந்தும், மக்கள் தமது பிரச்சினைகளை எதிர்க்கட்சித் தலைவரிடமே முன்வைக்கும் ☞6

## இது ரகசியம் அல்ல!

தையிட்டி விகாரை விடயத்தில் மக்களின் மூளையைக் கழுவி அந்த விகாரைக் காணிகளை மக்களிடமிருந்து சுவீகரிப்பதை நோக்கிய தீர்வுத் திட்டம் ஆளும்தரப்பால் ☞2

## ஐ.நா. அறிக்கை தீயிட்டு எரிப்பு

யாழில் சுழற்சிமுறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதி நாளில் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதோடு ஆளும்தரப்பால் ஐ.நா.வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தீ வைத்து எரிக்கப்பட்டது.

செம்மணியில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதிகோரி நடத்தப்பட்ட செப்டெம்பர் 25 முதல் சுழற்சி ☞2

## அனைத்துலக சமூகத்தின் கண்காணிப்பில்

# நம்மை நாமே ஆளக்கூடிய பொது வாக்கெடுப்பு தேவை

## பட்டினிப் போராட்டத்தின் இறுதியில் கோரிக்கை







அனைத்துலக சமூகத்தின் கண்காணிப்பில் தமிழ், மக்களாகிய எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க எம்மை நாமே ஆளக்கூடிய பொது வாக்கெடுப்பை நடைமுறைப்படுத்துமாறு சர்வதேச சமூகத்தை கோரி நிற்கின்றோம் என்று வட, கிழக்கு காணாமலாக்கப் பட்டவர்களின் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை சபையின் உயராணையருக்கு, வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனுவிலேயே ☞2

## தேடப்பட்டுவந்த நபரான 'டிங்கர்' துபாயில் கைதாகி நாடு கடத்தல்

மனித படுகொலைகளுடன் தொடர்புடைய வரும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயலில் ஈடுபடும் போதைப்பொருள் கடத்தல்காரரின் ஆதரவாளருமான இலங்கை பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஸ்ரீ தரண் நிரஞ்சன் என்னும் 'டிங்கர்' டுபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நாட்டிற்கு அழைத்து வரப்பட்டார்.

ஸ்ரீ தரண் நிரஞ்சன் என்னும் 'டிங்கர்' அண்மையில் கொழும்பில் இரு பிரதான பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த ஸ்ரீ தரண் நிரஞ்சன் என்னும் 'டிங்கர்' இலங்கை பொலிஸார் அரச புலனாய்வுபிரிவுமற்றும் ஐக்கிய அமீரகத்தின் டுபாய் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அண்மையில் டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டார். மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நேற்று புதன்கிழமை நாட்டிற்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

36 வயதான ☞2

## சிறுவர் சித்திரவதைக்கு எதிரான சட்டம் மாணவர் ஒழுக்கத்திற்கு எதிரானதல்ல

### பிரதமர் ஹரினி விளக்கம்

சிறுவர் சித்திரவதைக்கு எதிரான சட்டம் என்பது வன்முறைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட சட்டமே தவிர, ஒழுக்கத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட சட்டம் அல்ல. சிறுவர்கள் தவறு செய்தால், சமூகத்தில் தவறாக நடந்தால், அவர்களைச் சரியான பாதைக்குக் கொண்டுவர பெரியவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் தலையிடுவார்கள். இந்தச் சட்டமானது பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு எதிராகத் உருவாக்கப்பட்டதல்ல என்று பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி தெரிவித்தார்.

உலகசிறுவர் தினத்தை முன்னிட்டு, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் 'உலகை வழிநடத்த - அன்பால் எம்மைப் போஷியுங்கள்' எனும் தொனிப்பொருளில் ☞2

## கதிர்காமம் ஏரியில் இருந்து பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

கதிர்காமம் வெஹரகல ஏரியிலிருந்து ரி-56 ரக துப்பாக்கி மெகசின்கள், இலகுரக மெஷின் துப்பாக்கி மெகசின்கள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் பிற வெடி பொருட்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக ☞6

## பேருந்துக் கட்டணம் குறையாது

டீசலின் விலை 6 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள போதிலும் பேருந்து கட்டணத்தை குறைக்க முடியாது. தனியார் பேருந்து உரிமையாளர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் தான் ஆளும்தரப்பு தீர்மானங்களை எடுக்கிறது என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்துக்கு பின்னர் ஆட்சியில் இருந்த சகல ☞6

## உரிமைக்காகப் போராடும் மக்கள் மீது அடக்குமுறை

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு

எதிர்க்கட்சிகள் மாத்திரமின்றி தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள் மீதும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது. மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் தொடர்பில் மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கோ, சூழலியலாளர்களின் கருத்துக்களுக்கோ ஆளும்தரப்பு முக்கியத்துவமளிக்கவில்லை. பேச்சுவார்த்தையூடாக இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக, கலகமடக்கும் பிரிவின் ஊடாக பதிலளிக்க முயற்சிக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆளும்தரப்பின் மீது ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த விகாரை மக்களின் காணிகளையும் ஆக்கிரமித்தும் கட்டப்பட்டுள்ள நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த சில வருடங்களாக இந்த விகாரையை எதிர்த்துப் பௌர்ணமிக்குப் பௌர்ணமி போராட்டம் நடத்தி வருகின்றது. இதுவொரு சட்டவிரோத விகாரை என்பதை அனைத்துத் தரப்புக்களும் ஏற்கின்றன. எந்த அனுமதியும் இன்றி இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலத்தில் அவர்களாலேயே கட்டியெழுப்பப்பட்ட விகாரை இது. சட்டப்படி பார்த்தால் இந்த விகாரை அந்த இடத்திலிருந்து அகற்றப்படவேண்டும். ஆனால், அது நடக்கும் என்று தோன்றவில்லை.

என்பிபி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த விகாரை விடயத்தைக் கையாள்வதற்காக ஒரு குழுவை நியமித்தது. அந்தக் குழு தன்னளவில் கூடி ஆராய்ந்து இந்தப் பிரச்சினைக்கான தீர்வு என்ற ஒன்றைத் தயாரித்துள்ளது. அந்தக் குழுவின் கூட்டம் ஒன்று இன்றும் நடைபெறுகின்றது. அந்தக் கூட்டத்தின் பின்னர் குழு தயாரித்த தீர்வை ஏற்கும்படி விகாரை அமைந்துள்ள காணிகளின் உரிமையாளர்களை திணிப்பது என்பதே ஆளும்தரப்பின் முடிவு.

காணிகளுக்கு இழப்பீடு கேட்பவர்களுக்கு இழப்பீடு, பதில் காணி கேட்பவர்களுக்கு காணி என்கிற ரீதியில் அவரவர் ஏற்றுக்கொள்ளும் திணிப்பிற்கு ஏற்ப இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது என்பதே இதுவரைக்கும் குழுவிற்குள் பேசப்பட்டுள்ள தீர்வுகள் என்று தெரிகிறது. எந்தக் கட்டத்திலும் எந்த விதத்திலும் விகாரையை அகற்றுவதில்லை என்பதில் ஆளும்தரப்பு உறுதியாக உள்ளது. எனவே விகாரையை அங்கேயே வைத்திருப்பதற்கு ஏற்ற வகையிலான தீர்வுகளை நோக்கியே நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

இன்றைய கூட்டம் முடிந்த பின்னர் விகாரை அமைந்துள்ள பகுதியில் தமது காணிகள் உள்ள என்று உரிமை கோருபவர்களைத் தனித் தனியே அழைத்துப் பேசி அவர்கள் மீது ஆளும்தரப்பின் தீர்வைத் திணிப்பதே திட்டம் என்று தெரிகிறது.

..................................................

மன்னாரில் மக்கள் எவ்வளவு தீவிரமான போராட்டங்களை மேற்கொண்டபோதும் தற்போது மேற்கொள்ளப்பட்டு காற்றாலைத் திட்டத்தை நிறுத்துவதில்லை என்பதில் ஆளும்தரப்பு பிடிவாதமாக உள்ளது. இந்தத் திட்டத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் என்பது இழிவுநிலை கொண்டன என்று ஆளும்தரப்பின் ஆய்வுகள் கூறுவதால் மக்கள் எவ்வளவுதான் போராடினாலும் எக்காரணத்தைக் கொண்டும் திட்டத்தை நிறுத்துவதில்லை என்பதில் ஆளும்தரப்பு முடிந்த முடிவாகவே இருக்கின்றது.

வேண்டுமானால் இந்தத் திட்டத்தால் பாதிப்பில்லை என்ற விளக்கத்தை மக்களுக்கு வழங்கலாம் என்பதைத் தவிர வேறு எந்தவொரு விட்டுக்கொடுப்புக்கும் தயாரில்லை என்பதே ஆளும்தரப்பின் விடாப்பிடி நிலை. இந்த நிலையில் போராட்டக்காரர்கள் எந்த இடைஞ்சலும் இன்றி போராட்டம் நடத்தினால் அது குறித்து கண்டுகொள்ளாமல் எத்தனை வருடங்கள் வேண்டுமானாலும் போராட்டம் நடத்த அனுமதிக்கப்படும். வீதி மறியல் மற்றும் வேறு வழியில் போராட்டம் திசை மாறினால் அதனை அடக்குவதற்கான தெளிவான உத்தரவுகளும் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக காற்றாலைத் திட்டச் செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்பட்டால் அதன் மீது கைது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதிலும் ஆளும்தரப்பு தீவிரமாக இருக்கின்றது.

எனவே போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் வீதியிலேயே இருப்பதா என்பதைச் சிந்திக்கவேண்டும். அப்படியிருந்தால் காணாமற்போனவர்களின் உறவினர்கள் மாதிரி வீதியோரத்தையே தமது போராட்ட இடமாக்கிக் கொள்வதைத் தவிர வேறு தெரிவுகள் எவையும் அவர்களுக்கு இருக்கப்போவதில்லை. இந்தப் போராட்டத்தை மன்னார் மாவட்டத்திற்கு வெளியே எடுத்துச் செல்வது உள்ளிட்ட புதிய உத்திகளை நோக்கிப் பயணிப்பது குறித்துச் சிந்திக்கவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நம்மை நாமே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இனழிப்பு மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு சர்வதேச நீதி வேண்டியும், இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறையை முற்றாக நிராகரித்தும், செம்மணி மற்றும் வடக்கு கிழக்கில் உள்ள நூற்றுக்கணக்கான மனித புதைகுழிகள் விவகாரத்திற்கு காலம் தாழ்த்தாது விரைவான சர்வதேச சிறப்பு சுயாதீன விசாரணை ஆணையத்தை நியமித்திட கோரியும் குறித்த சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் செப்டெம்பர் 25 யாழ்ப்பாணம் செம்மணியிலும்ம் கிழக்குமாகாணத்திலும் தொடங்கப்பட்டு இன்றைய தினம் இப் போராட்டத்தின் ஊடாக பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்திற்கு எங்கள் கோரிக்கையை வெளியிடுகின்றோம்

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம் இன்றாகும் (நேற்று). தாயகத்தில் அதிகளவான சிறுவர், குழந்தைகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட

உறவுகளின் சங்கத்தின் உறுப்பினர்கள் 350க்கு மேற்பட்டவர்கள் பன்னாட்டு நீதி கோரி போராடி நீதி கிடைக்காமலே மன உழைச்சலில் இறந்துள்ளனர்.

ஐ நா.மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து, நீதி மற்றும் பொறுப்புகூறல் குறித்து இலங்கை ஆளும்தரப்பு தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்திவந்த முறை மற்றும் தண்டனையின்மை சுழற்சிகளில் இருந்தும் பெற்றுக்கொண்ட வரலாற்று சிறப்புமிக்க வாய்ப்பை இலங்கை தற்போது பெற்றுள்ளது இதனை தவறவிடக்கூடாது என வலியுறுத்தி கூறியுள்ளார்.

இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் அத்துடன் அனைத்து வகையான உள்நாட்டு பொறிமுறை மற்றும் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஆகியவற்றை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்

சர்வதேச நீதிப்பொறிமுறைகளில் மட்டுமே நாம் நம்பிக்கை வைக்கின்றோம், சுயாதீனமான, பக்கச்சார்பற்ற, சர்வதேசப் பொறிமுறையை நாம் கோருகின்றோம். தற்போதைய அலுவலக. கருத்திட்டம் தரமுயர்தப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் இனஅழிப்பு தொடர்பான விசாரனையை மேற்கொள்ள பன்னாட்டு நீதிமன்றத்திடம் பாரப்படுத்தப்பட வேண்டும் 2002 ஜூலை 01 ஆம் நாளுக்கும் காலத்தால் முற்பட்ட குற்றங்களை விசாரிக்கும் வகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு முற்பட்ட காலங்களுக்கு விசாரணை

மேற்கொள்ள முடியாதவிடத்து இலங்கை தொடர்பான சிறப்பு ; சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றை ஏற்படுத்தி இனவழிப்பு உள்ளிட்ட குற்றவியல் பொறுப்புக்கூறலுக்கான சட்ட நடவடிக்கை

அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட வேண்டும் மனிதப் புதைகுழிகள் பற்றிய கண்துடைப்பு விசாரணைகளை அரசு நிறுத்தி சர்வதேசத்தின் கண்காணிப்பில் நடைபெற வேண்டும். என கோருகின்றோம். வலிந்து கணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே? அவர்களுக்கான சர்வதேச நீதி வேண்டி 3146 நாட்கள் தொடர்ச்சியாக வீதிப் போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றோம் அவர்களுக்கான சர்வதேச நீதியை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.

கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு தொடராது நிறுத்த பின்வருவன தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை கேட்டுக்கொள்கிறோம்.

1) அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

2) ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட் வேண்டும்.

3) ஊடகவியலாளர்கள் தமது சுயாதீனமான ஊடகப்பணிகளை முன்னெடுப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

4) சிங்களகுடியேற்றம் பௌத்தமயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும்

5) தமிழர் தாயகப் பரப்பில் ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.

6) மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், நீதி வேண்டி போராடுபவர்கள் மீது புலனாய்வு பிரிவின் அச்சுறுத்தல்கள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

7) எமது தேசத்தற்கு பாதிப்பு ஏற்படுத்தும் திட்டங்கள் உடன் நிறுத்தப்பட்ட வேண்டும்.

8) எமது வளங்கள் சுரண்டப்படுவதை உடன் நிறுத்தப்பட வேண்டும்.

9) பயங்கரவாத தடுப்பு சட்டம், நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்

இலங்கையில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு ஈழத் தமிழருக்கான தனித்துவமான இறையாண்மைக்குரிய தாயகம், தேசியம் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு அனைத்துலக சமூகத்தின் மத்தியஸ்தத்துடன் நிறைந்த அரசியல் தீர்வு குறிப்பிட்ட கால நிர்ணயத்திற்குள் காணப்படவேண்டும்.

இயலாதவிடத்து விரைவாக அனைத்துலக சமூகத்தின் கண்காணிப்பில் தமிழ், மக்களாகிய எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கஎம்மை நாமே ஆளக்கூடிய பொதுவாக்கெடுப்பை நடைமுறைப்படுத்துமாறு சர்வதேச சமூகத்தை கோரி நிற்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐ.நா. அறிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.

இந்தப் போராட்டத்தில் வடக்கின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் நேற்றைய இறுதி நாளில் ஒரு மணியளவில் கவனயீர்ப்பு போரட்டத்தை முன்னெடுத்து தீப்பந்தங்களை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை சர்வதேச சிறுவர் தினத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரியும் கோஷங்களை எழுப்பினர்.

அத்துடன் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழ் இனவழிப்புக்கும் காணாமல் ஆக்கப்படுதல் போர் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இப்போராட்டத்தின் நிறைவில் ஆர்ப்பாட்டக்காரர்க ளால் அறிக்கை ஒன்று வாசிக்கப்பட்டு அந்த அறிக்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ள அதேவேளை, இலங்கை ஆளும்தரப்பால் ஐ.நா.வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை போராட்டக்கா ரர்களால் தீ வைத்துக் கொழுத்தப்பட்டது.

## தேடப்பட்டுவந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மட்டக்குளி பகுதியை சேர்ந்த ஸ்ரீ தரண் நிரஞ்சன் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல் காரருமான பழனி ஷிரான் க்ளோரியன் என்னும் கொச்சிக்கடை ஷிரானின் ஆதரவாளர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மேலும் சந்தேகநபர் 2024.10.16 அன்று கொழும்பு கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவத்தை பொதுமாயனத்துக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியிலிருந்த நபர் சுட்டு படுகொலை செய்யப்பட் சம்பவத்திலும் தொடர்புபட்டவர்.

சம்பவத்தில் கொலையாளி பணித்த காரைச் செலுத்தியது ஸ்ரீ தரண் நிரஞ்சன் எனத் தெரியவந்துள்ளது. அத்தோடு 2025.08.19 பேலியகொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதுடன் மேலும் ஒரு நபர் காயமடைந்த சம்பவத்திலும் கொலையாளிகளுக்கு 'டிங்கரே' துப்பாக்கியை கொண்டு வந்து வழங்கியவர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் சந்தேகநபருக்கு எதிராக வெளிநாடு செல்ல நீதிமன்றத்தால் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தபோதும், கடந்த ஒகஸ்ட் 19 அன்று சந்தேகநபர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றார் எனவும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சிறுவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் தின விழா நேற்று அலரி மாளிகையில் பிரதமர் இதனைக் தெரிவித்தார். சிறுவர் தினத்தை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரை பதித்த தபாலுறையும் வெளியிடப்பட்டது. நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

நமது நாட்டின் சிறுவர் சனத்தொகையானது எண்ணிக்கை அடிப்படையில் நாட்டின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 31% விகிதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அவர்களுக்காக ஒரு ஆளும்தரப்பு என்ற வகையில் நாம் நிறைவேற்ற வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கின்றது. இந்த வருட உலக சிறுவர் தினத்தின் தொனிப்பொருள் 'உலகை வழிநடத்த-அன்பால் எம்மைப் போஷியுங்கள்' என்பதாகும். உண்மையிலேயே குழந்தைகளுக்காக நாம் செய்ய வேண்டிய முதன்மையானப் பணி, அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதே ஆகும்.

நான் இங்கே குறிப்பிடும் பாதுகாப்பு என்பது சிறுவர்கள் எந்தப் பின்னணியில், எந்த நிலைமையில் வாழ்ந்த போதிலும் அந்த அனைத்துச் சிறுவர்களினதும் பாதுகாப்பை உறுதிசெய்து, எந்தச் சிறுவரையும் கைவிடாமல், பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அதேபோன்று உளவியல் ரீதியாகவும் அவர்களுக்குப் பாதுகாப்பான அதேவேளை சிறுவர் நேயச் சூழலில் சுதந்திரமாக வாழும் வாய்ப்பை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதாகும்.

'பாதுகாப்பான குழந்தைப் பருவம் - படைப்பாற்றல் மிக்க எதிர்காலச் சந்ததி' எனும் எண்ணக்கருவைக் கொண்ட ஒரு ஆளும்தரப்பு என்ற வகையில், நாம் ஏற்கனவே சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முழுமையான அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறோம்.

குறிப்பாக, கிட்டத்தட்ட கடந்த ஒரு வருடகாலமாக, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சானது சிறுவர்களின் நலன் மற்றும் சமூகப் பாதுகாப்புக்கான சட்டங்களை இயற்றியும், குழந்தைகளின் நல்வாழ்வுக்கான கொள்கைகள், மூலோபாயத் திட்டங்கள் மற்றும் செயல்திட்டங்களை வகுத்தும், அவற்றைப் பின்தொடர்ந்து மதிப்பீடு செய்தும் சிறுவர்களுக்கென பெருமளவு பணியினை ஆற்றி வருகின்றது.

அதற்கு அமைய கடந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ், நிறுவனப் பராமரிப்பு மற்றும் பொறுப்பின் கீழ் வாழுகின்ற சிறுவர்கள் மற்றும் தெரு வாசிகளாக வாழ்ந்து வரும் சிறுவர்களுக்காக மாதாந்தம் 5000 ரூபா கொடுப்பனவை வழங்கும் திட்டம், பல்வேறு விதத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் பாதுகாப்பான விதத்தில் சாட்சியம் அளிக்கக்கூடிய டிஜிட்டல் வசதிகளைக் கொண்ட சாட்சி அறைகளை அமைத்தல் போன்ற மிக முக்கியமான தீர்மானங்களை இந்த ஆண்டில் இதுவரை செயல்படுத்தி இருக்கின்றோம்.

அதேபோல், சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சகலவித வன்முறைகளையும் ஒழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது ஆளும்தரப்பின் விசேட கவனத்திற்குரிய விடயமாக இருந்து வருகின்றது. அதன் தொடர்ச்சியாகவே சிறுவர்களைச் சித்திரவதைக்கு உட்படுத்துவது குறித்த சட்ட வரைவு நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டது. அச்சட்ட வரைவு குறித்து பல்வேறு கருத்துக்களும், விவாதங்களும் எழுந்திருக்கின்றன. அது ஒரு நல்ல விடயம். சட்டங்களை இயற்றும்போது இவ்வாறான விவாதங்களும், கருத்துப் பரிமாறல்களும் கட்டாயம் ஏற்படவே செய்யும், ஏனெனில் நாட்டுக்கும் மக்களுக்கும் பொருந்தாத சட்டங்களை உருவாக்குவதில் பயனில்லை.

இருப்பினும், இந்த விவாதங்கள் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும். சித்திரவதைச் சட்டத்தை திருத்துவதன் நோக்கம் வன்முறைக்கு எதிராகச் செயல்படுவதே தவிர, ஒழுக்கத்திற்கு எதிராகச் செயல்படுவது அல்ல. குழந்தைகள் தவறு செய்தால், சமூகத்தில் தவறாக நடந்தால், அவர்களைச் சரியான பாதைக்குக் கொண்டுவர பெரியவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் தலையிடுவார்கள்.

சிறுவர்களைச் சரியான பாதைக்குக் கொண்டு வருவதற்குப் பெரியவர்கள் சிறுவர்களைச் சித்திரவதை செய்வதில்லை. ஒழுக்கத்தைப் பேணுவதற்காகப் பாடசாலைகளில் சித்திரவதை செய்யப்படுவதாக நான் நம்பவில்லை. அத்தோடு இந்தச் சட்டமானது பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு எதிராகத் உருவாக்கப்பட்டதல்ல.

சிறுவர்களைத் தவறுகளிலிருந்து காப்பாற்றும், பெரியவர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் சிறையில் அடைக்க நாம் தயாராக இல்லை. வழிதவறும் சிறுவர்கள் சிறைக்குச் செல்வதைத் தடுப்பதே எமது நோக்கமாகும். மனித நேயம் மிக்க, அன்பான ஆசிரியர்களிடம் கல்வி

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# நாட்டின் பிறப்பு வீதம் தொடர்பில் ஆளும்தரப்பின் கவனம் வேண்டும்

## வைத்தியர் சாபி வலியுறுத்து

தற்போது குழந்தைப்பேறு எண்ணிக்கை குறைந்துள்ளது. தரம் ஒன்றுக்கு பிள்ளைகளைச் சேர்க்கும் வீதம் இலட்சக்கணக்கில் குறைவடைந்துள்ளது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாட்டின் பிறப்பு வீதம் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நிலைமை மாற்றமடைய வேண்டும். பிறப்பு வீதம் ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டின் பிரதான அங்கமாக காணப்படுகிறது. ஆகவே ஆளும்தரப்பு இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று வைத்தியர் சாபி சஹாப்தீன் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ‘ ரன் தோனி‘ நூல் வெளியீட்டில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலாவெவ எனும் அழகிய சிறு கிராமத்தில் சக இனமக்களுடனும் சகோதரத்துவத்துடனும் இனவாதத்தை முழுமையாக புறக்கணித்து வாழ்ந்த மனிதன் நான். இனவாதம் என்பது புற்றுநோய் போன்றது. இனவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்காமல் நாடு என்ற ரீதியில் ஒருபோதும் முன்னேற முடியாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளேன்.

சிறியகிராமத்தில்இருந்துகடினமானசூழ்நிலைக்கு மத்தியில் அப்பாவி நோயாளர்களுக்கு சேவையாற்றி அவர்களின் ஆசிர்வாதத்தை பெற்று வைத்திய துறையில் சிறந்த முறையில் சேவையாற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்தான் 2019ஆம் ஆண்டு துயரமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டேன்.

2019.05.23ஆம்திகதியன்று தௌஹீத் முஸ்லிம் வைத்தியர் ஒருவர் 400 சிங்கள தாய்மார்களுக்கு சிசேரியன் முறைமை ஊடாக கருத்தடை செய்ததாக செய்திகள் வெளியாகின.தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமார அன்று இந்த செய்தி தொடர்பில் அழுத்தமாக குரல் எழுப்பினார்.

இந்த செய்தி தொடர்பில் பேசிய அரசுத் தலைவர் அநுரகுமார ‘அவ்வாறு இருக்க முடியாது, இதன் யதார்த்தத்தை குறிப்பிடுங்கள்’ என்று எவ்வித எதிர்பார்ப்புக்களும் இல்லாமல் எனக்காக பேசினார். வெளியாகிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு எனக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. என்னை கொழும்பு குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் 4ஆம் மாடிக்கு ஒப்படைத்தார்கள். அப்போதைய பணிப்பாளராக சானி அபேசேகர இருந்தார்.

சானி அபேசேகர போன்ற நபர் இல்லாமல் இருந்திருந்தால் என்னை போன்ற அப்பாவி மனிதன் இன்றும் சிறையில் இருந்திருக்க நேரிட்டிருக்கும். 20-25 ஆண்டுகள் என்னைச்சிறையில் வைப்பதற்காகவே கைது செய்தார்கள் என்று வியத்மக அமைப்பின் உறுப்பினர் ஒருவர் என்னிடம் குறிப்பிட்டார். செய்த புண்ணியத்தால் விடுதலையானீர்கள் என்றும் குறிப்பிட்டார்.

கடுமையானநிபந்தனைகளுடன்தான்எனக்குபிணைவழங்கப்பட்டது. வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது. கொழும்பிலும் இருக்க முடியவில்லை. கல்முனைக்கு சென்றேன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவுக்கு வந்து கையொப்பமிடவேண்டும். பொது போக்குவரத்து ஊடகங்களில் வர முடியாது. அவ்வாறு வரும்போது ‘இவர்தான் அந்த கருத்தடை செய்த வைத்தியர் சாபி’ என்றார்கள். பொருளாதார நெருக்கடியின்போது எனது வங்கி கணக்குகள் அனைத்தும் முடக்கப்பட்டன. மாதச் சம்பளமும் முடக்கப்பட்டது. பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தேன். எனக்கு எதிரான ‘ பி‘ அறிக்கை விசாலமானது. இந்த ‘பி’ அறிக்கையை சாதனை என்றே குறிப்பிடவேண்டும். இவர்கள் சூழ்ச்சி செய்தார்கள். அதிகாரத்துக்காக மக்களைக் கொன்றார்கள். நான் அரசியல் செய்யவில்லை. எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமானவன் இல்லை. நாட்டுக்கு நல்லது நடக்குமாயின் அந்த இடத்தில் இருப்பேன்.

நாம் அனைவரும் கண்ட கனவு தற்போது நனவாகியுள்ளது. இனவாதமற்ற நாடு உருவாகியுள்ளது. மனிதாபிமானத்தை பாதுகாத்து இலங்கையர் என்ற அடிப்படையில் நாட்டை முன்னேற்றுவதற்கு ஒன்றுபடாவிடின் எதிர்கால தலைமுறையினருக்கு அழகான இலங்கையை கையளிக்க முடியாத நிலை ஏற்படும்.

2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனது தாய் என்னை இங்கு இருக்க இடமளிக்கவில்லை. ‘அரசுத் தலைவர் தேர்தல் நடைபெறவுள்ளது. நீ இங்கு இருக்க வேண்டாம், உன்னைக் கொல்வார்கள். அதிகாரத்துக்காக 300 பேரை கொன்றவர்களுக்கு, நீ யார்’ என்று குறிப்பிட்டு என்னை இங்கு இருக்க இடமளிக்கவில்லை. இதன் பின்னர் நான், என் மனைவியுடன் பிரித்தானியா சென்றேன்.

அங்கு இருக்க மனம் இடமளிக்கவில்லை. மாற்றம் ஒன்று ஏற்பட போகிறது என்று மனம் சொன்னது. 24 ஆம் திகதி விமானம் இருந்தது. நான் 19 ஆம் திகதி நாட்டுக்கு வந்து 24 ஆம் திகதி மாற்றத்துக்கான ஒத்துழைப்பை வழங்கினேன்.

என் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களால் வைத்தியர் என்ற ரீதியில் பல துயரங்களுக்கு முகங்கொடுத்தேன். எனது குடும்பத்தாரும் பாதிக்கப்பட்டார்கள். அவற்றை ஒருபோதும் மீட்ட முடியாது. குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து நீதிமன்றத்துக்கு என்னை அனுப்பிய இறுதி நாளன்று நான் சி.ஐ.டியின் அப்போதைய பணிப்பாளரிடம் சென்று ‘சேர் சிறைச்சாலையில் 3 அல்லது 2 சிறைகூடுகளில் உள்ளவர்களின் பயன்பாட்டுக்கு 2 கழிப்பறைகளே உள்ளன. அவற்றை புனரமைக்க எனக்கு வாய்ப்பளியுங்கள்’ என்று குறிப்பிட்டேன்.

‘இது சிறந்த யோசனை, நீங்கள் விடுதலையானால் இந்த யோசனையை பொலிஸ்மா அதிபருக்கு அறிவியுங்கள். அப்போது நான் இந்த பதவியில் இருந்தால் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவேன்’ என்று சானி அபேசேகர குறிப்பிட்டார்.

சுமார் 3 வருடங்களுக்கு மேலாக எனக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. பௌத்த அற கோட்பாட்டுக்கமைய கர்மவினை கண்முன் பலவற்றை உறுதிப்படுத்தியது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இடைநிறுத்தப்பட்ட சம்பள தொகை எனக்குக் கிடைத்தது. அந்த சந்தர்ப்பத்தில் வைத்தியசாலைகளில் அடிப்படைத் தேவைகள்கூட நெருக்கடியாகியிருந்தது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் எனக்கு 24 இலட்சம் ரூபா நிலுவை சம்பளம் கிடைக்கப்பெற்றது. இந்த பணத்தை என்ன செய்யலாம் என்று நான் எனது மனைவியுடன் கலந்துரையாடினேன். கடமையின்போது மேலதிக நேர கொடுப்பனவை பெற்றாலும் நாங்கள் அதனை பயன்படுத்துவதில்லை. நானும் எனது மனைவியும் மேலதிக நேர கொடுப்பனவை ஏழைகளுக்கு பகிர்ந்தளிப்போம். ஒருபோதும் அந்த மேலதிக கொடுப்பனவை நாங்கள் எமது தேவைக்கு பயனபடுத்தவில்லை.

கடமை செய்யாமல் இந்தப் பணம் கிடைக்கப்பெற்றது ஆகவே அந்த நிதியை நன்கொடையாக வழங்குங்கள் என்ற எண்ணம் இறைவனால் எமது சிந்தனைக்கு அறிவுறுத்தப்பட்டது. கோடி கணக்கில் பெறுமதியான மருத்துவ உபகரணத்தை நிறுவனத்துடன் தொடர்புகொண்டு 24 இலட்சத்துக்கு நாங்கள் பெற்றுக்கொடுத்தோம். பிரபல்மடையவேண்டும் என்பதற்காக நான் இவற்றை குறிப்பிடவில்லை. இலங்கையில் எதிர்மறையான கருத்துக்களால் பிரபல்யமான நபர்நான்.

இன்று பலர் என்னுடன் அன்பாகப் பேசுகிறார்கள். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நாட்டை விட்டு ஏன் செல்லவில்லை என்று என்னிடம் பலர் கேட்டார்கள். அன்று பேராசிரியர்கள் என்று குறிப்பிட்டுக்கொண்டு இனவாதத்தை முன்னிலைப்படுத்தி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக என்னை இலக்கு வைத்தவர்கள் பௌத்த மத கோட்பாட்டினால் குறுகிய காலத்துக்குள் தண்டிக்கப்பட்டார்கள், காணாமலாக்கபட்டார்கள். அவர்களின் நிலையை கண்டு கவலையடைகிறேன். கர்மவினை அனைத்தையும் வெளிப்படுத்தியது.

இந்த நாட்டுக்குப் பயன் சேர்க்கும் வகையிலும், ஏழைகளுக்கு சேவையாற்றும் வகையிலும் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றே என் பிள்ளைக்கு அறிவுரை வழங்கியுள்ளேன். இனத்தை முன்னிலைப்படுத்தி செயற்படவேண்டாம் என்றும் குறிப்பிட்டுள்ளேன்.

இன்று நாங்கள் சுதந்திரமாக வாழ்கிறோம். ஆளும்தரப்புக்கு மனமார்ந்த வகையில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்கால தலைமுறையினருக்கு சிறந்த நாட்டை உருவாக்க வேண்டும்.

குருநாகல் போதனா வைத்தியசாலையில் தான் நான் இன்றும் சேவையாற்றுகிறேன். குருநாகல் வைத்தியசாலையில் தொடக்கத்தைக் காட்டிலும் தற்போது குழந்தைப்பேறு எண்ணிக்கை குறைந்துள்ளது. தரம் ஒன்றுக்கு பிள்ளைகளைச் சேர்க்கும் வீதம் இலட்சக்கணக்கில் குறைவடைந்துள்ளது. நான் கருத்தடை செய்யவில்லை. இதுவரைகாலமான முறைமை தான் கருத்தடை செய்தது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாட்டின் பிறப்பு வீதம் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நிலைமை மாற்றமடைய வேண்டும். பிறப்பு வீதம் ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டின் பிரதான அங்கமாக காணப்படுகிறது. ஆகவே ஆளும்தரப்பு இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

## பெருந்தோட்ட தொழிலாளர்கள் மீது பழிவாங்கல்

# ரூ. 2000 சம்பளம் வேண்டுமென்றோர் 1,750 கூடக் கொடுக்கிறார்கள் இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

*பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,750 ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டபோது, அது போதாது என்றும் 2000 ரூபா அடிப்படை சம்பளம் வழங்கப்படவேண்டும் என்று அன்று ஜேவிபியின் தொழிற்சங்கம் கூறியது. ஆனால் இன்று பெருந்தோட்ட மக்கள் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதால் 1,750 ரூபாவைக்கூட பெற்றுக் கொடுக்காமல் ஆளும்தரப்பு அவர்களைப் பழி வாங்குகின்றது ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.*

*நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேசசபை உறுப்பினர்களுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,*

*பெருந்தோட்ட மக்கள் சகல தேர்தல்களிலும் எமக்கு ஆதரவளித்திருக்கின்றனர். கடந்த அரசுத் தலைவர்த் தேர்தலின் போது மலையக தமிழ் மக்களும், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் சஜித் பிரேமதாசவுக்கே வாக்களித்திருந்தனர். கடந்த காலங்களில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1750 ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்திய போது, ஜே.வி.பி. தொழிற்சங்கம் 2000 ரூபா வழங்கப்பட வேண்டும் என்று வாதிட்டது.*

*ஆனால் தற்போது ஜே.வி.பி. ஆட்சியமைத்துள்ள நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1750 ரூபா சம்பளமும் இல்லை, தொழிலும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சஜித் பிரேதோசவுக்கு வாக்களித்தமையால் ஆளும்தரப்பு அவர்களை பழி வாங்குவதற்காகவே இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கிறதுர்.*

*இலங்கையில் அமெரிக்க முதலீடுகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டின் மீது நம்பிக்கையின்மையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளை சிறையிலடைத்து அதில் திருப்தியடைவது மாத்திரமே அரசாங்கத்தின் இலக்காகவுள்ளது. எதிர்க்கட்சிகள் மீதான அரசியல் பழிவாங்கல்களுக்கு அப்பால் கடந்த ஓராண்;டு காலமாக எந்தவொரு அபிவிருத்தியும் நாட்டில் இடம்பெறவில்லை.*

*பெருந்தோட்டத் துறை உள்ளிட்ட எந்தவொரு விவசாயத்திலும் உற்பத்திகள் அதிகரிக்கப்படவில்லை. இதனால் பயிர் செய்கையாளர்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் ஆளும்தரப்பால் அவர்களுக்கு எந்தவொரு நிவாரணமும் வழங்கப்படவில்லை. முற்றுமுழுதாக தமது வாக்குகளை ஜே.வி.பி.க்கு வழங்கிய அரச பணியாளர்களும் இன்று கைவிடப்பட்டு வீதிக்கிறங்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.*

*ஊழல் ஒழிப்பு எனக் கூறும் ஆளும்தரப்பு இதுவரையில் கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரதூரமான மோடிகள் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக சில்லறை கொள்ளைகளில் ஈடுபட்டோர் மாத்திரமே கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஐ.தே.க. சம்மேளனத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும் பங்குபற்றியதை அவதானித்த ஆளும்தரப்பு, அதை கள்வர்களின் கூடாரம் என விமர்சித்தது.*

*ஆனால் தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குள்ளும் கள்வர்கள் இருக்கின்றனர் என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. உண்ண உணவு இல்லை, உடுத்த ஆடையில்லை என பஞ்சம் பாடியவர்கள் இன்று பலகோடி சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவுள்ளமை எவ்வாறு? இதுதான் ஜே.வி.பி.யின் கொள்கையா? 2020இல் ஆட்சியமைத்தவர்கள் இரண்டு ஆண்டுகளிலேயே ஆட்சியைக் கைவிட்டுச் செல்லும் நிலைமை ஏற்பட்டது. அதேபோன்று வெகுவிரைவில் இவர்களும் ஆட்சியை கைவிட்டுச் செல்ல வேண்டியேற்படுமா என்ற சந்தேகம் தற்போது வலுப்பெற்றுள்ளது என்றார்.*

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பிளாஸ்டிக் நெருக்கடிக்கு சிறிய படிகள் போதாது

**இலங்கையில் பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருந்த ஒருமுறைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக் (Single-use plastics) கட்டுப்பாட்டில் இறுதியாக ஓர் ஒளிக்கீற்று தெரிகிறது. உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி, வரும் மாதம் வெளியிடப்படவுள்ள அரசுக் கன்னடச் செய்தி (Gazette notification) மூலம் வியாபாரிகள் பிளாஸ்டிக் ஷாப்பிங் பைகளை இலவசமாக வழங்கமுடியாது; கட்டணத்துக்கு மட்டும் வழங்கவேண்டும் என்ற கட்டாயம் விதிக்கப்பட உள்ளது.**

**இது முழுமையான தீர்வாக இல்லாவிட்டாலும், சரியான திசையில் எடுத்த ஒரு படியாகக் கருதப்படலாம். குறைந்தபட்சம் நெகிழி (பிளாஸ்டிக்) குப்பைகளின் தீமைகளைப் பற்றி விழிப்புணர்வை அதிகரிக்கவும், சில காலத்திற்கு பயன்பாட்டைச் சுருக்கவும் உதவும். எனினும், பல தசாப்தங்களாக மாற்று பைகள், கல்வி நிகழ்ச்சிகள் ஆகியவை இருந்தபோதிலும், ஒருமுறைப் பிளாஸ்டிக் நெருக்கடி குறைவடையாது என்பதே உண்மை.**

### இலங்கையின் பிளாஸ்டிக் புள்ளிவிவரங்கள்

**இன்று இலங்கையின் நீர்த்தேக்கங்கள், நதிகள், கடற்கரை மற்றும் கடல் சூழல்கள் பிளாஸ்டிக் மாசால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஆண்டு ஒன்றுக்கு 1.6 மில்லியன் மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவு உருவாகிறது; அதில் சுமார் 70% ஒருமுறைப் பிளாஸ்டிக் பொருட்கள்தான்.**

**சமீபத்திய ஆய்வு ஒன்றின்படி, மாதம் ஒன்றில் இலங்கை 2 கோடி தயிர் கப்புகள், 1.5 கோடி லஞ்ச் ஷீட்கள், 2 கோடி சூப்பர் மார்க்கெட் பைகள், 10 லட்சம் சாஸ், ஜாம், ஷாம்பு பைகளைக் கைவிடுகிறது. இதில் சுமார் 1.7 இலட்சம் டன் பிளாஸ்டிக் வருடந்தோறும் சேகரிக்கப்படாமல் எரிக்கப்பட்டோ புதைக்கப்பட்டோ விடுகின்றன. அல்லது சுற்றுச்சூழலுக்குள் கசிந்து விடுகின்றன.**

### சுற்றுலா மற்றும் பொருளாதார அச்சம்

**உனவதுணா, மிரிச்ஸா போன்ற சுற்றுலாக் கடற்கரைகள் அடிக்கடி பிளாஸ்டிக் குப்பைகளால் மூழ்கியிருப்பது வழக்கமாகிவிட்டது. பிளாஸ்டிக் பைகள், ஸ்டிரா, உணவு மூடிகள் ஆகியவை கடற்கரைகளில் குவிந்து கிடக்கின்றன. இதனால் இலங்கை ' ஆசியாவின் வெப்பமண்டல சொர்க்கம்' என்ற புகழுக்கு சேதம் ஏற்படுகிறது.**

**சுற்றுலாதுறை 2023ஆம் ஆண்டு தேசிய உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 7.8% பங்களித்துள்ளது. பிளாஸ்டிக் மாசினால் சுற்றுலா பயணிகள் அதிருப்தியடைந்தால், அவர்கள் மீண்டும் வருவதை நிறுத்துவார்கள். இது வேலை இழப்புகள், வெளிநாட்டு நாணய இழப்புகள் மற்றும் மரீன் உயிரின அழிவுகள் என மூன்று முனைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.**

### தீவிர செயற்பாடு அவசியம்

**கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கை, ஒருமுறைப் பிளாஸ்டிக் பொருட்களுக்கு பல தடை விதிமுறைகள் கொண்டு வந்துள்ளது. ஆனால் சுமார் 70% பிளாஸ்டிக் கழிவு இன்னும் ஒருமுறைப் பயன்பாட்டு பொருட்களிலிருந்தே வருகிறது.**

**பிரச்சினையின் மையம்: சட்டங்களின் பற்றாக்குறை அல்ல, அமல்படுத்தலின் இல்லாமை. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIA), சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமங்கள் (EPL) போன்ற சட்டக் கட்டமைப்புகள் உள்ளன. ஆனால் வலுவான கண்காணிப்பு, தண்டனை இல்லாததால் அவை பலனளிக்கவில்லை.**

### கடற்கரை பகுதிகளில் அதிக தாக்கம்

**பிளாஸ்டிக் மாசு, நாடு முழுவதும் இருப்பினும், கடற்கரை பகுதிகளில் அதிகம். மக்கள் தொகை அடர்த்தியும், தொழில்களும் அங்கு அதிகமாக இருப்பதால் மாசு கூடுகிறது. எனவே, கடல் பாதுகாப்புப் பகுதிகளை விரிவுபடுத்துதல், நிலைத்தமான மீன்பிடி முறைகள், பசுமை சுற்றுலா நடைமுறைகள் ஆகியவை அவசியம்.**

**மேலும், கடற்கரை மக்களை கல்வி, பங்கேற்பு பாதுகாப்பு திட்டங்கள் மூலம் ஈடுபடுத்தி, நடத்தை மாற்றம் ஏற்படுத்துவது நீடித்த தீர்வாகும்.**

### தேசிய கொள்கை தேவை

**ஒருமுறைப் பிளாஸ்டிக்குகள் தொடர்பான சமீபத்திய கட்டாய கட்டணச் சட்டம் ஒரு நல்ல முன்னேற்றம். ஆனால் இது போதாது. சுற்றுச்சூழல், ஆரோக்கியம், சுற்றுலா, மீன்பிடி, பொருளாதாரம் என பல துறைகளைச் சுற்றிவளைத்துள்ள இந்த நெருக்கடிக்கு, முழுமையான தேசிய கொள்கை அவசியமாகிறது.**

**சமூகத்தின் ஒவ்வொரு அடுக்கு – பெற்றோர்கள், மாணவர்கள், தொழில்கள், அரசியல் தலைவர்கள் – அனைவரும் இணைந்து செயல்படவேண்டும். பிளாஸ்டிக் நெருக்கடியின் அளவைக் கடுமையாக உணர்ந்து, அதன் முழு வாழ்க்கைச் சுழற்சியை கையாளும் வகையில் கொள்கைகள் வடிவமைக்கப்பட வேண்டும்.**

**சிறிய படிகள் முக்கியமானவை. ஆனால் நேரம் இழக்காமல் பெரிய படிகள் எடுக்கப்படாவிட்டால், பிளாஸ்டிக் நெருக்கடி இலங்கையின் எதிர்காலத்தை ஆபத்துக்கு உள்ளாக்கும்.**

# தாஜுதீன் இறப்பு தொடர்பான உண்மை வெளிவரவேண்டும்

## நாடகம் வேண்டாம் என்கிறது பெரமுன கட்சி

இறப்பின் உண்மை வெளிப்படாமல் அது இரகசியமானதாக அமைவது இறப்பைக் காட்டிலும் கொடுமையானதே. ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் இறப்பு தொடர்பான இரகசியம் வெளிப்படவேண்டும். மற்றொரு நாடகத்தை அரங்கேற்றக் கூடாதென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு அரசுத்தலைவர் தேர்தலில் ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் இறப்பு பிரதான பேசுபொருளாக்கப்பட்டது. நல்லாட்சி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தவுடன் இவரது இறப்பு தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தியது.

இறப்பின் உண்மை வெளிப்படாமல் அது இரகசியமானதாக அமைவது கொடுமையானதே. ஆகவே ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் இறப்பு தொடர்பான இரகசியம் வெளிப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம்.

நல்லாட்சி ஆளும்தரப்பு நீண்டகாலமாக மேற்கொண்ட விசாரணைகளின் பின்னணியில் தற்போது புதிய விடயம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஓரிரு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துக்கொண்ட வசீம் தாஜுதீனின் மாமனார் உணர்வுபூர்வமான வகையில் வசீம் தாஜுதீனின் இறப்புப் பற்றி உரையாற்றியிருந்தார். இவ்வாறான பின்னணியில் நேற்று (நேற்று முன்தினம்) பதில் ஊடக பேச்சாளர் மற்றொரு புதிய விடயத்தை ஊடகங்களுக்கு குறிப்பிடுகிறார்.

பதில் ஊடக பேச்சாளர் மற்றொரு புதிய விடயத்தை ஊடகங்களுக்கு தெளிவுப்படுத்திய விதத்தில் உறுதியற்ற தன்மை காணப்படுவது வெளிப்படுகிறது. இந்த விவகாரம் நாடகத்துக்கு அப்பாற்பட்டு விசாரணைகளை அடிப்படையாக கொண்டதாக இருத்தல்வேண்டும்.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி ஆளும்தரப்பு வசீம் தாஜுதீனின் இறப்பு தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும்போது நாரஹேன்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் குற்றப்புரிவின் பொறுப்பதிகாரியான சுஜித் தம்மிக பெரேரா என்பவர் கைது செய்யப்படுகிறார்.

இவர் பிற்பட்ட காலத்தில் ஊடகங்களில் 'தன்னை கைது செய்து இந்த சம்பவத்தில் ஒருசில நபர்களின் பெயரை குறிப்பிடுமாறு அதிகாரிகள் குறிப்பிட்டார்கள். அவ்வாறு குறிப்பிட்டால், உதவி பொலிஸ் பரிசோதகராகப் பதவி உயர்த்துவார்கள் எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்' என்று குறிப்பிட்டிருந்தார். ஆகவே வசீம் தாஜுதீனின் இறப்பு தொடர்பில் மீண்டும் நாடகத்தை அரங்கேற்றக்கூடாது. உண்மையை வெளிப்படுத்தவேண்டும் என்றே கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

# தாஜுதீன் கொலை தொடர்பில் நீதியான விசாரணை வேண்டும்

## நாமல் ராஜபக்ச வலியுறுத்து

வசீம் தாஜுதீன் இறப்பை தமது அரசியலுக்காகப் பயன்படுத்திக் கொள்ளாமல் ஆளும்தரப்பு நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த விடயத்தை அரசியலுக்கு பயன்படுத்துவது அவரது ஆத்மாவுக்கும் இழைக்கும் மாபெரும் அநீதியாகும். அரசியல் பேசுபொருளுக்காகவே பொலிஸ் ஊடக பிரிவு புதிய விடயத்தை வெளிப்படுத்தியுள்ளது என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சக்கள் மீது இந்த ஆளும்தரப்பும் நல்லாட்சி ஆளும்தரப்பும் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தன. விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன. தேர்தல் மேடைகளில் குறிப்பிட்ட பொய்களை உண்மையாக்குவதற்கு முயற்சித்தார்கள்.

வசீம் தாஜுதீன் இறப்பு தொடர்பில் நாராஹேன்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியை கைது செய்து போலியான வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கும் கடந்த ஆளும்தரப்பின் அதிகாரிகள் முயற்சித்தார்கள். அந்த அதிகாரிகள்தான் இந்த ஆளும்தரப்பினதும் உயர் பதவிகளில் உள்ளார்கள்.

முன்னாள் கடற்படைத் தளபதி கைது விவகாரத்தில் போலியான வாக்குமூலம் வழங்குவதற்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாக குறிப்பிட்டு பொலிஸ் பணியாளர் ஒருவர் நீதிமன்றம் சென்றுள்ளார். ஒருசில அதிகாரிகள் போலியான சாட்சியங்களைத் திரட்டி ஆளும்தரப்பையும், ஆட்சியாளர்களையும் திருப்திப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

வசீம் தாஜுதீன் இறப்புத் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடகங்களுக்கு விடயங்களை குறிப்பிடுகிறார். இந்த விடயம் தொடர்பான விசாரணையின் முன்னேற்றத்தை நீதிமன்றத்துக்கு அறிக்கையிடவேண்டுமே தவிர ஊடகங்களுக்கு குறிப்பிடக்கூடாது. அரசியல் பேசுபொருளுக்காகவே இந்த விடயம் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வசீம் தாஜுதீன் இறப்பு தொடர்பில் நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துகிறோம். இந்த விடயத்துடன் தொடர்புடைய சி.சி.டி. காணொளியில் இடுப்பில் கை வைத்துக் கொண்டிருப்பவர் தனது கணவர் என்று பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவரின் மனைவி குறிப்பிட்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அந்த நபர் கடந்த காலங்களில் யாருடன் இருந்தார், யாருக்காக செயற்பட்டார் என்பதை பொலிஸார் விசாரிக்க வேண்டும்.

வசீம் தாஜுதீன் இறப்பை தமது அரசியலுக்காக பயன்படுத்திக் கொள்ளாமல் ஆளும்தரப்பு நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த விடயத்தை அரசியலுக்கு பயன்படுத்துவது அவரது ஆத்மாவுக்கும் இழைக்கும் மாபெரும் அநீதியாகும். ரணில் வாரம், ஜஸ் வாரம் முடிவடைந்து விட்டது. தற்போது வசீம் தாஜுதீன் வாரம் தொடங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வாரங்கள் எவ்வாறானதாக இருக்கும் என்று தெரியவில்லை.

ஆளும்தரப்பின் நோக்கத்துக்கு அமைய பொலிஸ் ஊடக பேச்சாளர் ஊடங்களுக்கு பொய்யான விடயங்களை குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள விடயங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தகவல்களை குறிப்பிட்டால் அவருக்கு எதிராக எதிர்வரும் நாட்களில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார்.

# நாடு திரும்பினார் அரசுத் தலைவர்

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த அரசுத் தலைவர் அநுரகுமார, நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாடு திரும்பினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச்சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க செப்டம்பர் 22 ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டு சென்றார்.

பின்னர், ஜப்பானிய அரசின் அழைப்பின் பேரில், அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்க செப்டம்பர் 27 ஆம் திகதி காலை ஜப்பானின் ஒசாகா நகரில் உள்ள கன்சாய் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள், அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுடன் சென்றிருந்தனர்.

அதன்படி, பயணத்தை முடித்துக்கொண்டு, அவர்கள் அனைவரும் நேற்றுக் காலை 09.30 மணிக்கு தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான UL-403 விமானம் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

# மொழிபெயர்ப்பாளர்களின் பணி மகத்தானது

## பிரதி அமைச்சர் முனீர் தெரிவிப்பு

பல்வேறு மொழி பேசும் மக்கள் வாழும் எமது நாட்டில் மொழிபெயர்பாளர்களின் பணி மகத்தானதாகும். நாட்டில் இடம்பெற்ற 30வருட யுத்தத்துக்கு மொழியும் ஒரு காரணமாகும் என தேசிய ஒருமைப்பாடு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்தார்.

செம்டம்பர் 30 சர்வதேச மொழிபெயர்ப்பு தினத்தை முன்னிட்டு அரச மொழி திணைக்களம் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

மொழிபெயர்ப்பாளர்களுக்கு மொழி மூலம் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் இயலுமை இருக்கிறது. ஆளும்தரப்புக்கும் ஒவ்வொருவருக்கிடையிலும் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவையே இருந்து வருகிறது. சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது ஆளும்தரப்பு என்றவகையில் அதன் பொறுப்பை உணர்ந்து, பொழிபெயர்ப்பு துறையில் இருந்துவரும் பிரச்சினைகள் தொடர்பில் புரிந்துணர்வுடன் அதற்கு தேவையான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க கலவனம் செலுத்தி இருக்கிறது.

அதேபோன்று மொழிபெயர்ப்பு சேவையை மேலும் விரிவாக்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஆளும்தரப்பு வழங்கும்.உலகில் எழுதப்படுகின்ற மிகவும் சிறந்த மொழிபெயர்ப்பு புத்தகங்கள் அனைத்து மொழிகளும் பேசுகின்ற மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவது மொழிபெயர்ப்பு மூலமாகும் என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சீமெந்து மூலம் பாலம் கட்டுவது சாத்தியமாகும். அதேபோன்று மொழி மூலம் பாலம் கட்டும் இயலுமை மொழிபெயர்ப்பாளருக்கு இருக்கிறது. பல்வேறு மொழிகள் மூலம் மொழிபெயர்ப்பு செய்யும் மொழிபெயர்ப்பாளர் ஒருபோதும் இனவாத மற்றும் மதவாதமாக சிந்திக்க மாட்டார்கள். அவர்கள் மனிதநேயமாகவே எப்போதும் சிந்திக்கக்கூடியவர்களாகவே நான் பார்த்திருக்கிறேன்.

எனவே பல்வேறு பிரதேசங்களில் பல்லின மக்கள் வாழும் எமது நாட்டை பொறுத்தவரை மொழிபெயர்ப்பாளர்களின் சேவை மிகவும் பாராட்டத்தக்கதாகும். எமது நாட்டில் இடம்பெற்ற 30 வருட போருக்கான காரணத்தை ஆராய்ந்த நிபுணர்களின் தீர்மானத்தில், மொழி தெரியாமையும் ஒரு காரணம் தெரிவித்திருக்கிறார்கள் என்றார்.

# வர்த்தகர்களிடம் ரூ. 10 கோடி மோசடி சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது

'உருமய' திட்டத்தை குறிப்பிட்டு காணி உரிமை பத்திரம், வீட்டு உரிமை பத்திரம் இல்லாதோருக்கு நிரந்தர உரிமை பத்திரம் வழங்குவதாக தெரிவித்து கல்முனை வர்த்தகர்களை ஏமாற்றி 10 கோடி ரூபா பண மோசடியில் ஈடுபட்ட மேலும் ஒரு சந்தேகநபர் கைது.

2024 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'உருமய'திட்டத்தை குறிப்பிட்டு காணி உரிமை பத்திரம், வீட்டு உரிமை பத்திரம் இல்லாதோருக்கு நிரந்தர உரிமை பத்திரம் வழங்குவதாக தெரிவித்து சுமார் 10 கோடி ரூபா பணத்தை மோசடி செய்தார் என்று ஒருவர் மீது குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடளிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த அதிகாரிகள் கடந்த ஒக்டோபர் மாதம் சம்பவத்துடன் தொடர்புடைய பெண் ஒருவரைக் கைது செய்திருந்தனர். குறித்த பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், திங்கட்கிழமையன்று இதனுடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான பெண் 43 வயதுடைய பகமுன பகுதியை சேர்ந்தவராவதுடன் கிரிபத்கொடை பகுதியில் தற்காலிகமாக விடுதி ஒன்றில் தங்கியிருந்தமை விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. அதேவேளை சந்தேகநபர் 55 வயதுடைய மஹரகம பகுதியை சேர்ந்தவர் ஆவார்.

கைதான பெண் தன்னை சட்டத்தரணி என அடையாளப்படுத்தி, கல்முனை பகுதியில் உள்ள 164 வர்த்தகர்களுக்கு 'உருமய' திட்டத்தின் கீழ் உரிமை பத்திரம் இல்லாத காணிகளுக்கு நிரந்தர உரிமை பத்திரங்களை பெற்றுத்தருவதாகத் தெரிவித்துள்ளார். மேலும் வர்த்தகர் ஒருவரிடமிருந்து 6 கோடி ரூபா பணத்தை பெற்று மோசடி செய்துள்ளார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்தோடு சந்தேகநபர் கல்முனையில் உள்ள 50 வர்த்தகர்களை சிறிகொத்தாவில் உள்ள ஐக்கிய தேசிய கட்சி தலைமையகம் மற்றும் கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றிற்கும் அழைத்து அரசியல் பரப்புரைகளை மேற்கொண்டு, காணி உரிமை பத்திரங்களை பெற்றுத் தருவதாக ஏமாற்றி பணத்தை பெற்றுக்கொண்டு மோசடி செய்துள்ளனர் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்த முறைகேடான விதத்தில் ஈட்டப்பட்ட 20 இலட்சம் ரூபா பணத்தை நிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் இது தொடர்பில் குற்றப்புலனாய்வுதிணைக்களம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

## சிறுவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்கும் திறமையான, உணர்வுபூர்வமான சிறுவர்கள் தலைமுறையை உருவாக்குவதே ஆளும்தரப்பின் எதிர்பார்ப்பாகும் எனப் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ்,நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார, பிரதி அமைச்சர் வைத்தியர் நாமல் சுதர்ஷன ஆகியோர் உட்பட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்றஉறுப்பினர்கள்,அமைச்சுக்களின் செயலாளர்கள்,அதிகாரிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், மற்றும் ஏராளமான சிறுவர்கள் கலந்துகொண்டனர்.

## நாடாளுமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையைநாடுஅடைந்துள்ளது.தீர்வுகளையும் பதில்களையும் எதிர்பார்த்து தற்போதைய ஆளும்தரப்பிற்குப் பெரும்பான்மை அதிகாரத்தைவழங்கியபோதும்,ஆளும்தரப்பு மக்கள் எதிர்பார்த்த பதில்களையோ, தீர்வுகளையோஇதுவரைவழங்கியபாடில்லை என்று அவர் விமர்சித்தார். வரலாற்றில் முதல்முறையாக,இந்தநாட்டுமக்கள்அதிகாரம் இல்லாத எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சிப்நாடாளுமன்றஉறுப்பினர்களிடம் பிரச்சினைகளை முன்வைத்து வருகின்றனர்.

எதிர்க்கட்சி பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் பதில்களையும் பெற்றுத் தர முடியுமான சகல வழிகளிலும் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இலங்கையின் முதல் விவசாயக் குடியிருப்புப் பிரதேசம் அமைக்கப்பட்ட இந்த மண்ணில் உள்ள விவசாயிகளுக்கு, தற்போதைய அரசாங்கத்திடமிருந்து உரிய சலுகையோ, ஒத்துழைப்புகளோ கிடைக்கவில்லை என எதிர்க்கட்சி தலைவர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளுக்குப் பொருத்தமான உயர் தரத்திலான விதைகள், உரங்கள், பூச்சிநாசினிகள்போன்றவைகிடைப்பதில்லை, விவசாய நடவடிக்கைகள் முடிந்த பின்னரே உர மானியம் இவர்களை வந்தடைகிறது.

மேலும், உரத்தின் தரத்தில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஒரே ஒரு கையெழுத்து இடுவதன் மூலம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்று கூறப்பட்டபோதும், யானை-மனித மோதல்கள் தீர்க்கப்படாமல் தொடர்கின்றன.

அவர் நெல் கொள்வனவு குறித்தும் ஆளும்தரப்பைக் கடுமையாக விமர்சித்தார். வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதிலும், ஈர நெல் 90 முதல் 95 ரூபா வரையிலும், ஏனைய நெல் 120 ரூபாவுக்குமே கொள்முதல் செய்யப்படுகின்றன. வாக்குறுதியளிக்கப்பட்ட 150 ரூபா உத்தரவாத விலை கிடைத்தபாடில்லை, என்று எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்தார்.

பெரும் களஞ்சியசாலைகளை அமைப்போம் எனக் கூறிய அமைச்சரால், தற்போதுள்ள களஞ்சியங்களை நிரப்பக்கூட நெல்லை கொள்வனவு செய்ய ஆளும்தரப்பு நடவடிக்கைஎடுக்கவில்லை. விவசாயிகளின் பிரச்சினைகளை முன்வைக்கும்போது ஒலிவாங்கி துண்டிக்கப்பட்டால், விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்ந்து விடாது என்று அவர் ஆளும் தரப்பினரை சுட்டிக்காட்டி கூறினார்.

உலகெங்கிலும் உள்ள நாடுகள் விவசாயத்தின் மூலம் வளர்ச்சியடைந்து வரும் நிலையில், இலங்கையில் உள்ள முதலாளித்துவவர்க்கத்தைச்சார்ந்ததரப்பினர் விவசாயம் தோல்வியடைந்துவிட்டதாகக் கூறுகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், விவசாயத்தை வெற்றிகரமனதாக்க எதிர்க்கட்சி செய்ய முடியுமான சகல தலையீடுகளையும் செய்யும் என்றார்.

## கதிர்காமம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கதிர்காமம் கோனகங்கார பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யால பாதுகாப்பு வனப்பகுதியில் உள்ள வெஹரகல ஏரியிலிருந்து துப்பாக்கி பாகங்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் புலனாய்வுபிரிவுவழங்கியதகவலுக்கமைய இராணுவத்தினரால் செவ்வாய்க்கிழமை இரவு கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து ஆயுதங்களை மீட்ட பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஏரியிலிருந்து ரி-56 ரக மெகசின் 214, எல்.ஜி.எம் ட்ரம் மெகசின் 38, எம்.பி.எம்.ஜி 200 மெகசின் 11, எம்.பி.எம்.ஜி 100 மெகசின் 9, ரி-81 மெகசின் 6, 12.7 -100 ட்ரம்ஸ் 1 உள்ளிட்ட பிற வெடி பொருட்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அத்தோடுவெடிமருந்துகள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் 2 பெட்டிகளும், ஆயுதங்கள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் இரண்டு பொதிகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெஹரகல ஏரியின் நீர்மட்டம் குறைவடைந்துள்ள நிலையில் ஆயுதங்கள் இருந்தமைஇனங்காணப்பட்டுள்ளது.கடற்படை சுழியோடிபடைப்பிரிவின்உதவியுடன்ஏரியின் ஏனைய பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன்கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் கோனகங்கார பொலிஸார் மேலதிக விராணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பேருந்துக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கங்களும் தனியார் பேருந்து தொழிற்றுறையை இரண்டாம் பட்சமாக கருதியே செயற்பட்டன.தற்போதைய ஆளும்தரப்பும் தனியார் பேரூந்து தொழிற்றுறையை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் செயற்படுகிறது.

மாதாந்தஎரிபொருள்விலைச்சூத்திரத்துக்கு அமைய நேற்று முன்தினம் நள்ளிரவு எரிபொருளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.இதற்கமைய டீசலின் விலை 6 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதமும் டீசலின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டது.

தற்போது டீசலின் விலை 6 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள போதிலும் பேருந்து கட்டணத்தை குறைக்க முடியாது.12 ரூபாவால் டீசல் கட்டணம் குறைக்கப்பட்டிருந்தால் பேரூந்துகட்டணத்தைக்குறைப்பதுதொடர்பில் ஆராயலாம் என்றார்.

## உரிமைக்காகப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சுமத்தினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இவ்வாறு குற்றஞ்சுமத்தியஅவர்மேலும்தெரிவித்ததாவது:

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்துக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டம் பொது மக்களால் முன்னெடுக்கப்பட்டது. இந்த திட்டத்தினால் சுற்றுச்சூழலுக்கும், பறவைகளுக்கும் பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் என சூழலியலாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் ஆளும்தரப்பு மக்களின் போராட்டங்களுக்கோ, சூழலியலாளர்களின் கருத்துக்களுக்கோ முக்கியத்துவமளிக்காமல் அவற்றை உதாசீனப்படுத்துகிறது. இவற்றுக்கு பதிலளிப்பதற்கு ஆளுந்தரப்பில் எவரும் முன்னுரிமையளிக்கவுமில்லை.

குறைந்தபட்சம் இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள்கூட இதற்கு பதிலளிக்கவில்லை. இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும்போது சம்பந்தப்பட்டதரப்பினருடன்கலந்தாலோசித்து பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகும். ஆனால் ஆளும்தரப்பிடமிருந்து இதுவரையில் இந்தக் கேள்விகளுக்குப் பதில் எதுவும் கிடைக்கவில்லை. மாறாக கலகம் அடக்கும் பிரிவினரை அனுப்பி அவர்களை தாக்குவதே ஆளும்தரப்பின் பதிலாகவுள்ளது. கடந்த ஆட்சிக் காலங்களில் இவ்வாறு இடம்பெற்றால் அதற்கெதிராகவும் இவர்கள் கொடியேந்தி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மின்சாரசபை பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்குபதிலாகஅதனைஅத்தியாவசிய சேவையாகப்பிரகடனப்படுத்தியிருக்கின்றனர். கடந்த ஆளும்தரப்புக்கள் செய்ததையே இந்த ஆளும்தரப்பும் முன்னெடுத்துச் செல்கின்றது. திருகோணமலையில் இந்திய நிறுவனத்துக்கு காணி வழங்கப்பட்டமை, நுரைச்சோலையில் அனல் மின் உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டமை உள்ளிட்ட சகல விடயங்களிலும் அன்று ஜே.வி.பி. மக்கள் சார்பாகவே செயற்பட்டது. ஆனால் இன்று எந்தவொரு பிரச்சினை தொடர்பிலும் மக்களுடன் கலந்தாலோசிப்பதற்கு இவர்கள் தயாராக இல்லை. அரசியல், சமூக, கலாசார, பொருளாதாரத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய மாற்று சக்தியாகவே இவர்கள் தம்மைக் காண்பித்துக் கொண்டனர்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் தொடங்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் ஓர் எழுத்தில்கூட மாற்றமின்றி அரசுத் தலைவர் அநுர அதனை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

மகிந்தராஜபக்சவைசந்திக்கச்சென்றதைத் தவிர ரணில் செய்த அனைத்தையும் அநுர தொடர்ந்துகொண்டிருக்கின்றார். எதிர்க்கட்சிகள் மாத்திரமின்றி தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள் மீதும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது.

இவ்வாறான வழிமுறைகளை கைவிட்டு மக்களுடன் சுமூகமான பேச்சுக்களை முன்னெடுத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு ஆளும்தரப்பை வலியுறுத்துகின்றோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
A1 A2 A3 A4 A5 A6 A7 A8 A9 A10 A11 A12 A13 A14
B1 B2 B3 B4 B5 B6 B9 B10 B11 B12 B13 B14 B15
C1 C2 C3 C4 C5 C6 C7 C8 C9 C10 C11 C12 C13


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.10.2025இல் வெளியிடப்பெற்றது